4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 569/2019 நாள்: 10.11.2025 வா.சா.1 – அருணகிரி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

எனது தாயாருக்கு எந்த ஆண்டு திருமணமானது என்று எனக்கு தெரியாது. எனது தாயாருக்கு திருமணமானது முதல் பொள்ளாச்சி தாலுகா, பெரிய போது என்ற ஊரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். நான் பிறந்தது முதல் மேற்படி ஊரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய தாயாருக்கு மேற்படி ஊரில் உள்ள முகவரியில் தான் ஆதார் அட்டை, குடும்ப அட்டை முகவரியில் உள்ளன. என்னை பொறுத்த வரை ஆதார் அட்டை பொள்ளாச்சி முகவரியில் உள்ளது. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியும். 1வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேன். எப்போது படித்து பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை, எனது முந்தைய வழக்கறிஞர் திரு.வெங்கடேஷ் அய்யா எனக்கு முன்னிலையான போது நான் படித்து பார்த்தேன். 1வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கு பதில் வழக்குரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். இந்த வழக்கில் எத்தனை சொத்துக்கள் உள்ளன, எந்தெந்த

ஆவணங்களிலிருந்து மேற்படி சொத்துக்கள் உள்ளன என்று சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்குரையில் இரண்டு சொத்துக்களை நான் குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்துக்கள் சம்பந்தப்பட்ட தற்போதைய சிட்டா, அடங்கல், வரி ரசீதுகள் ஆகியவற்றை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் 1வது பிரதிவாதி பெயரில் தான் உள்ளது, அவர் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் வருவாய் துறை ஆவணங்கள் 1வது பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சாட்சி அது பற்றி தெரியவில்லை என்று கூறுகிறார். தாவா சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் துறை ஆவணங்களை நான் தற்போது வரை பார்க்கவில்லை என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் இந்த வழக்கில் வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவை 1வது பிரதிவாதி பெயரில் உள்ளது என்று கூறுகிறார். ராமலிங்க கவுண்டர் 2018 ம் வருடம் 3வது மாதம் 27 அல்லது 28 தேதியில் இறந்தார் என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை, அதை பார்க்கவும் இல்லை என்றால் சாட்சி தெரியவில்லை என்று கூறுகிறார். தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் விவரங்கள் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நான் B.Com இரண்டாம் ஆண்டு வரை படித்துள்ளேன். எனது தாயார் தற்போது நடந்து செல்லும் அளவில் ஆரோக்கியமாக தான் உள்ளார் என்றால் சரியல்ல. எனது தாயாரின் உடல் நிலை

சரியில்லை என்று மருத்துவ சான்று எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தாயாரும் ராமலிங்க கவுண்டரும் குடும்ப சொத்தை பொறுத்து வாய்மொழியாக ஒரு பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் பெயரில் தற்போது எவ்வித சொத்தும் இல்லை. முன்பு எனது தாயார் பெயரில் ஆனைமலையில் 10 ¼ ஏக்கர் நிலமிருந்ததது. செல்லம்பாளையத்தில் எவ்வளவு ஏக்கர் நிலமிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனது தாயார் பெயரில் சொத்து இருப்பதாக எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்கும், ராமலிங்க கவுண்டருக்கும் இடையே பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.311/2002 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது எனது தாயாருக்கும், ராமலிங்க கவுண்டருக்கும் இடையே நடந்த குடும்ப ஏற்பாட்டை உறுதி செய்வதற்காக நடைபெற்றது என்றால் சரிதான். எனது தாயாருக்கு மேற்படி குடும்ப ஏற்பாட்டில் கிடைத்த சொத்தை 21.11.2011 ல் விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ராமலிங்க கவுண்டருக்கு கிடைத்த சொத்தை தான் கடந்த 19.04.2002 ல் பிரபுராம் பெயருக்கு ராமலிங்க கவுண்டர் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாய்மாமா பழனிசாமி கவுண்டரின் வாரிசுகள் தற்போது கோவையில் வசித்து வருகிறார்கள். மேற்படி பழனிசாமியின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க நான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை

என்றால் சாட்சி மேற்படி வாரிசுகளை அனுகி நான் கேட்ட போது தாங்கள் வழக்கில் வழக்கு நடத்த முன்வரவில்லை, நீயே பார்த்துக்கொள் என்று தெரிவித்ததால் நாங்கள் இந்த வழக்கில் மேற்படி பழனிசாமி கவுண்டர் வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பழனிசாமி கவுண்டரின் வாரிசுகளிடம் கேட்டேன். மேற்படி விவரத்தை நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது பிரதிவாதியை ராமலிங்க கவுண்டர் தத்தெடுத்தது சம்பந்தமான ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். ராமலிங்க கவுண்டர் 1வது பிரதிவாதியை தத்தெடுப்பதற்கு முன்பாகவே 1வது பிரதிவாதி, ராமலிங்க கவுண்டரின் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல, மேற்படி ராமலிங்க கவுண்டரின் தோட்டத்தில் 1வது பிரதிவாதி குடும்பத்தார் வேலையாட்களாக இருந்து வந்தார்கள் என்று சாட்சி கூறுகிறார். ராமலிங்க கவுண்டர், 1வது பிரதிவாதியை தத்தெடுப்பதற்கு முன்பாகவே 1வது பிரதிவாதியை மகனாக பாவித்து பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதியை மகனாக பாவித்து ராமலிங்க கவுண்டர் பராமரித்து வந்த காரணத்தினால் ராமலிங்க கவுண்டருக்கும், எனது தாயாருக்கும் இடையே நடந்த பாகபிரிவினை குடும்ப ஏற்பாட்டிற்கு பிறகு அவருக்கு கிடைத்த சொத்தை 1வது பிரதிவாதிக்கு உயில் ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் சாட்சி உயில் ஆவணம் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதி, ராமலிங்க கவுண்டரின் மகன் என்ற கோதாவில் அதை விளம்புகை

செய்யக்கோரி உடுமலைபேட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.328/2018 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது பிரதிவாதி பெற்ற மேற்படி தீர்ப்பு, தீர்ப்பாணை மற்றும் சுவீகார பத்திரம் ஆகியவற்றை குறித்து நான் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் சாட்சி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு தான் மேற்படி விவரம் எனக்கு தெரியவந்தது என்று கூறுகிறார். ராமலிங்க கவுண்டர், 1வது பிரதிவாதிக்கு எழுதி வைத்த 2 செட்டில்மெண்ட் ஆவணம் எங்களுக்கு எப்போது தெரிய வந்தது என்ற விவரத்தை வழக்குரையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, சாட்சி தற்போது குறிப்பாக சொல்லவில்லை என்று கூறுகிறார். தெரிய வந்ததற்கான ஆதாரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி அதற்கான ஆதாரங்களை எவ்வாறு தாக்கல் செய்ய முடியும் என்று கூறுகிறார். ராமலிங்க கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தை யாருக்கு எழுதி கொடுப்பதற்கும் அவருக்கு முழு உரிமையுண்டு என்றால் சரியல்ல, அது பூர்வீக சொத்து என்று கூறுகிறார். ராமலிங்க கவுண்டர் மற்றும் அவரது சகோதரர் பழனிசாமி கவுண்டர் மற்றும் எனது தாயாருக்கு இடையே கோவை நீதிமன்றத்தில் ஒரு பாக வழக்கு நடந்தது என்றால் அது பற்றி தெரியாது என்று சாட்சி கூறுகிறார். ராமலிங்க கவுண்டருக்கு குறைவான பங்கும், எனது தாயாருக்கும், பழனிசாமி கவுண்டருக்கும் அதிக பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதால் அதை எதிர்த்து ராமலிங்க கவுண்டர் கோவை நீதிமன்றத்தில்

வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.10 16:37:22 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.